வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 256/2021

வழக்கு சாட்சி PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகிராமன், தலைமை காவலர், சோழவரம், காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | அரசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 44 |

தேதி 25.11.2024

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சோழவரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 20.09.2019 அன்று நான் M3 புழல் காவல் நிலையத்தில் மதியம் 1.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை Para காவலராக பணிபுரிந்து வந்தேன். இரவு 20.00 மணியளவில் காவல் நிலைய தொலைபேசியில் தனது பெயர், முத்து நெ. 28, நேரு தெரு, கல்பாளையம் , விநாயபுரத்தில் இருந்து பேசுவதாகவும், தனக்கு காவலர் துணை வேண்டுமெனவும், அனுப்பி வைக்குமாறும் கூறினார். அந்த நேரத்தில் மதியம் 1.00 மணி முதல் 9.00 மணி வரை ஜிப்ஜி 1 இன்சார்ஜான பணியில் இருந்த தலைமை காவலர் 18382 சோனைமுத்துவிற்கு காவல் நிலைய தொலைபேசியில் இருந்து அவரது கைப்பேசிக்கு தொடர்பு கொண்டு நெ. 28, நேரு தெரு, கல்பாளையம், விநாயபுரத்திற்கு செல்லுமாறு கூறினார். அரைமணி நேரத்தில் சோனைமுத்து தொலைபேசியில், என்னிடம் அந்த கால் முத்து என்கிற தக்காளிமுத்து என்றும், அவர் தன்னை சினிமா போலீசா என கேட்டு வலது காலால் எட்டி உதைத்ததில் தான் கீழே விழுத்து இரண்டு காலிலும் சிராய்ப்பு

காயம் ஏற்பட்டதாகவும், எழுந்து செல்ல முற்பட்டவரை சட்டையை பிடித்து இழுத்து, கிழித்து கீழே தள்ளியதில் அவரது இடது கை மோதிர விரல், சுண்டு விரல் அடிப்பட்டதாகவும், தன்னை அசிங்கமாக பேசுவதாகவும், கூறியதால் நான் அவரை காவல் நிலையம் திரும்பி வர கூறினேன். அவர் வந்தபோது அவர் கூறியவாறு காலிலும், கையிலும் காயம் இருந்தது. அன்று நிலைய பொறுப்பில் உதவி ஆய்வாளர் மனோகரனிடம் நடந்ததை கூறினார். அவர் விசாரணை செய்தார், கத்தியை காட்டி முத்து மிரட்டியதாகவும், சோனைமுத்து கூறினார்.

**குறுக்கு விசாரணை**

நான் அன்றைய தினம் புழல் காவல் நிலையம் பொறுப்பில் இருந்தேன் என்றால் பாதுகாப்பு பொறுப்பில் இருந்தேன். அன்றைய தினம் நான்தான் பொறுப்பு என்றால் இல்லை. பணிபதிவேடுகள் பராமரிப்பு என்னுடைய பணி என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் பணி. எனக்கு தகவல் போன் மூலமாகத்தான் தெரியும் என்றால் ஆமாம். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். சோனைமுத்து போன்மூலம் சொல்லியதால்தான் தகவல் தெரியும் என்றால் ஆமாம். நான் நிலையம் வந்தபின்பும் பார்த்தேன். ரோந்து பணிக்கு செல்ல கூறுவது யாருடைய பணி என்றால் அன்றைய நிலைய பொறுப்பு அதிகாரி பணி. நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் உதவி ஆய்வாளர்தான். நிலைய பொறுப்பு அதிகாரியிடம் இருந்து உரிய முறையில் அனுமதி பெறாமல் எதார்ச்சி அதிகாரமாக சோனைமுத்து சென்று பிரச்சனை செய்ததற்கு காவல் அதிகாரி என்பதால் நானும், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவத்தை பற்றி முழுவதும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**